**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 542/2021**
**வழக்கு சாட்சி PW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகையா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சுடலை | தொழில் | : | உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| கிராமம் | : | பாவூர்சத்திரம் | வயது | : | 66 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of February 5th, 2026.

**(எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று பாவூர்சத்திரத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 21.12.2012 ம் வருடம் செங்கோட்டை காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, அன்றைய தினம் போலீஸ் பார்ட்டிகள் சகிதம் தலைமைக்காவலர்கள் ராஜேந்திரன், ஹரிஹரன், முருகன், சுதாகரன் ஆகியோர்களுடன் ரோந்து செய்து, இரவு 08.00 மணியளவில் செங்கோட்டை பஸ்ஸ்டாண்ட் அருகிலுள்ள பிள்ளையார் கோவில் பக்கம் வரும்போது அங்கு நின்றிருந்த எதிரிகள் 3 பேரும் எங்களை கண்டதும் ஓட முயற்சித்தார்கள். நாங்கள் மடக்கி பிடித்து விசாரிக்க அதில் இளங்கோ என்பவர் கருப்பு பையை பின்னால் மறைத்து வைத்திருந்ததை பரிசோதனை செய்தபோது, அதில் ரூ.1000/– நோட்டுக்களும், ரூ.500/– நோட்டுக்களும், ரூ.100/– நோட்டுக்களும்

மொத்தம் ரூ.9,69,600/- இருந்தது. அந்த நோட்டுக்கள் கள்ளநோட்டுக்கள் என எங்களுக்கு சந்தேகம் வந்தது. இது சம்பந்தமாக அவர்களிடம் விசாரிக்கும் போது இளங்கோ என்பவர் திருப்பூரில் தனது வீட்டில் கம்யூட்டர் வைத்து கள்ளநோட்டுக்கள் தயாரித்து செல்போன்கள் மூலம் கேரளாவில் உள்ள நபர்களுடன் பழகி அங்கு சென்று புழக்கத்தில் விடுவதாக கூறினார்.

கள்ளநோட்டுக்கள் வைத்திருந்த குற்றத்திற்காக மேற்படி சொத்துக்களையும், கருப்பு பை ஒன்று, 3 செல்போன்கள் ஆகியவற்றை கைப்பற்றி எதிரிகள் 3 பேர்களையும் கைது செய்து அத்தாட்சி பிறப்பித்தும், அங்கு இருந்தவர்கள் யாரும் அதில் கையொப்பமிட முன்வராததினால் போலீஸ் பார்ட்டிகளாகிய நாங்களே கையொப்பமிட்டு, இரவு 22.00 மணிக்கு நிலையம் வந்து நிலைய பொறுப்பு சிறப்பு சார்பு ஆய்வாளர் முத்துச்சிவன் என்பவரிடம் தனிஅறிக்கை மூலம் ஒப்படைத்தேன். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.1 ஆகும். தனி அறிக்கை அ.சா.ஆ.2 ஆகும். இந்த வழக்கு சம்பந்தமாக நிலைய குற்ற எண்.316/2012, சட்டப்பிரிவுகள் 489 A, 489 C, 489D ஆக சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.07 14:45:35 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 542/2021</u>**
**<u>வழக்கு சாட்சி PW-2</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பொன்னையா | தொழில் | : | சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| கிராமம் | : | இடைகால் | வயது | : | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of February 5th, 2026.

**(எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது கடையநல்லூர் காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.12.2012ம் தேதியில் செங்கோட்டை காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, அன்றைய தினம் போலீஸ் பார்ட்டிகள் சகிதம் சிறப்பு சார்பு ஆய்வாளர் முருகையா, தலைமைக்காவலர்கள் ராஜேந்திரன், ஹரிஹரன், சுதாகரன் ஆகியோர்களுடன் ரோந்து செய்து, இரவு 08.00 மணியளவில் செங்கோட்டை பஸ்ஸ்டாண்ட் அருகிலுள்ள பிள்ளையார் கோவில் பக்கம் வரும்போது அங்கு நின்றிருந்த எதிரிகள் 3பேரும் எங்களை கண்டதும் ஓட முயற்சித்தார்கள். நாங்கள் மடக்கி பிடித்து விசாரிக்க அதில் இளங்கோ என்பவர் கருப்பு பையை பின்னால் மறைத்து வைத்திருந்ததை பரிசோதனை செய்தபோது, அதில் ரூ.1000/- நோட்டுக்கள் 740 எண்ணிக்கையிலும், ரூ.500/- நோட்டுக்கள் 374 எண்ணிக்கையிலும்,

ரூ.100/— நோட்டுக்கள் 296 எண்ணிக்கையிலும், மொத்தம் ரூ.9,69,600/— இருந்தது. அந்த நோட்டுக்கள் கள்ளநோட்டுக்கள் என எங்களுக்கு சந்தேகம் வந்தது. இது சம்பந்தமாக அவர்களிடம் விசாரிக்கும் போது இளங்கோ என்பவர் திருப்பூரில் தனது வீட்டில் கம்யூட்டர் வைத்து கள்ளநோட்டுக்கள் தயாரித்து தானும், மற்ற எதிரிகளும் செல்போன்கள் மூலம் கேரளாவில் உள்ள நபர்களுடன் பழகி அங்கு சென்று புழக்கத்தில் விடுவதாக கூறினார்.

கள்ளநோட்டுக்கள் வைத்திருந்த குற்றத்திற்காக மேற்படி சொத்துக்களையும், கருப்பு பை ஒன்று, 3 செல்போன்கள் ஆகியவற்றை கைப்பற்றி எதிரிகள் 3 பேர்களையும் கைது செய்து அத்தாட்சி பிறப்பித்தும், அங்கு இருந்தவர்கள் யாரும் அதில் கையொப்பமிட முன்வராததினால் போலீஸ் பார்ட்டிகளாகிய நாங்களே கையொப்பமிட்டு, இரவு 22.00 மணிக்கு நிலையம் வந்து நிலைய பொறுப்பு சிறப்பு சார்பு ஆய்வாளர் முத்துச்சிவன் என்பவரிடம் முருகேசன் தனிஅறிக்கை மூலம் ஒப்படைத்தார்.. இந்த வழக்கு சம்பந்தமாக நிலைய குற்ற எண்.316/2012, சட்டப்பிரிவுகள் 489 A, 489 C, 489D ஆக சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.07 14:45:42 +0530